## அரசு உயர்நிலைப்பள்ளி - ஆதமங்கலம் - 610 207

## பத்தாம் வகுப்பு - தமிழ்

## பாடநூலில் இல்லாத ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. நாகப்பட்டினம் என்ற ஊர்ப்பெயரின் மரூஉவைத் தேர்ந்தெடுக்க
அ. நாகூர் ஆ. நாவலூர் இ. நாகை ஈ. நாகையூர்
2. புதிரை விடுவிப்பதற்கான சொல்லைத் தேர்க
புதிர் - நாலெழுத்தில் கண்சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்
அ. நறுமணம் ஆ. புதுமை இ. காற்று ஈ. விண்மீன்
3. எதிர்மறையாக மாற்றுக. எழுதாக் கவிதை .........
அ. எழுதிய கவிதை ஆ. பாடிய கவிதை
இ. பேசிய கவிதை ஈ. கூறிய கவிதை
4. இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவினை வணிகன் ஆஅய் அல்லன் - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்
அ. அகநானூறு ஆ. மதுரைக்காஞ்சி இ. புறநானூறு ஈ. கலித்தொகை
5. துகிர் என்ற சொல்லின் பொருள்
அ. பட்டு ஆ. பவளம் இ. பண்பு ஈ. படை
6. வினா .......... வகைப்படும்
அ. 6 ஆ. 8 இ. 10 ஈ. 4
7. ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெயர்
அ. வாட்சன் ஆ. பெப்பர் இ. எந்திரன் ஈ. இலா
8. சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம்
அ. தற்காலம் ஆ. கற்காலம் இ. சங்க காலம் ஈ. இடைக்காலம்
9. தமிழின் முதல் அகராதியான சதுரகராதியை எழுதியவர்
அ. சீத்தலைச் சாத்தனார் ஆ. வீரமாமுனிவர்
இ. ஜெயகாந்தன் ஈ. நாகூர் ரூமி
10. சங்க நூல்களில் பண்ணோடு பாடப்பட்ட நூல்
அ. பத்துப்பாட்டு ஆ. நீதிவெண்பா இ. பரிபாடல் ஈ. நற்றிணை
11. நாகூர் ரூமி ............... மாவட்டத்தில் பிறந்தவர்
அ. மதுரை ஆ. கோவை இ. தஞ்சை ஈ. சிவகங்கை
12. ஞானம் எனும் கவிதை இடம் பெற்ற நூல்
அ. எழுத்து ஆ. மீட்சி விண்ணப்பம் இ.கோடைவயல் ஈ. காலக்கணிதம்
13. விடையின் வகைகள்
அ. 6 ஆ. 8 இ. 4 ஈ. 5
14. ஆசிரியரிடம், "இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று மாணவர் கேட்பது
அ. அறிவினா ஆ. அறியா வினா இ. ஐய வினா ஈ. கொடை வினா
15. திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் "பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக" எனக் குறிப்பிடப்படும் இசை ஆட்டம்
அ. தப்பாட்டம் ஆ. புலி ஆட்டம் இ. காவடியாட்டம் ஈ. ஒயிலாட்டம்
16. சாகித்திய அகாதெமி விருது பெற்ற கண்ணதாசனின் புதினம்
அ. ஆட்டனத்தி ஆதிமந்தி ஆ. இயேசு காவியம்
இ. சேரமான் காதலி ஈ. அர்த்தமுள்ள இந்துமதம்
17. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில் - இக்குறளில் பயின்று வரும் அணி
அ. சொற்பொருள் பின்வருநிலையணி ஆ. வஞ்சப்புகழ்ச்சி அணி
இ. எடுத்துக்காட்டு உவமையணி ஈ. உவமையணி
18. சிவப்புச் சட்டை பேசினார் - இத்தொடரில் அமைந்துள்ள தொகையின் வகை
அ. பண்புத்தொகை ஆ. அன்மொழித்தொகை
இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை
19. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள், வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம், மழைக்கு ஏங்கும் புவி, வெப்பப் பெருமூச்சு விடும், கசகசந்த உயிரினங்கள் - இத்தொடருக்கு ஏற்ற தலைப்பு
அ. வனத்தின் நடனம் ஆ. உயிர்ப்பின் ஏக்கம்
இ. நீரின் சிலிர்ப்பு ஈ. காற்றின் பாடல்
20. **ஏழ்மை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?** - இங்கு வேடன் என்ற சொல் யாரைக் குறிக்கிறது?
அ. இராமன் ஆ. இலக்குவன் இ. குகன் ஈ. கம்பன்
21. உடன்பட்டுக் கூறும் விடை எது?
அ. ஏவல் விடை ஆ. நேர் விடை
இ. மறை விடை ஈ. சுட்டுவிடை
22. "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது
அ. வினா எதிர் வினாதர் வினா ஆ. வினா எதிர் வினாதல் விடை
இ. உற்றது உரைத்தல் விடை ஈ. உற்றது உரைத்தல் வினா
23. துன்ன காரரும் தோலின் துன்னரும் - இப்பாடலடி இடம்பெற்ற நூல்
அ. மணிமேகலை ஆ. தேம்பாவணி இ. கம்பராமாயணம் ஈ. சிலப்பதிகாரம்

24. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும், ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது

அ. தொழிற்பெயர் ஆ. வினையாலணையும் பெயர்

இ. பண்புப் பெயர் ஈ. விகுதி பெற்ற தொழிற்பெயர்

25. அனைவரின் பாராட்டுகளால், பாடகரின் முகம் வெட்கத்தால் ..............

அ. வெளுத்தது ஆ. கருத்தது இ. சிவந்தது ஈ. மலர்ந்தது

26. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை................

அ. உரு ஆ. கரு இ. மரு ஈ. செறு

27. பாரதியார் பணியாற்றிய இதழ்கள்

அ. புதுவை முரசு, இந்தியா ஆ. இந்தியா, குயில்

இ. சுதேசமித்திரன், இந்தியா ஈ. குடியரசு, புதுவைமுரசு

28. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது -

அ. முறை நிரல்நிறைப் பொருள்கோள்

ஆ. எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

இ. கொண்டு கூட்டுப் பொருள்கோள்

ஈ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

29. பொருத்துக

| | திணை | தொழில் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | அ. ஏறு தழுவுதல் |
| 2. | முல்லை | ஆ. உப்பு விளைத்தல் |
| 3. | மருதம் | இ. தேனெடுத்தல் |
| 4. | நெய்தல் | ஈ. நெல்லரிதல் |

அ. 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ ஆ. 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-அ

இ. 1-ஆ, 2-ஈ, 3-அ, 4-இ ஈ. 1-ஆ, 2-ஈ, 3-இ, 4-அ

30. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ................ திருமொழியாக உள்ளது

அ. மூன்றாம் ஆ. நான்காம் இ. ஐந்தாம் ஈ. ஆறாம்

31. முன்பனிக் காலம் என்பது .................. மாதங்கள் நிலவும்

அ. ஆவணி, புரட்டாசி ஆ. ஐப்பசி, கார்த்திகை

இ. மார்கழி, தை ஈ. மாசி, பங்குனி

32. ம.பொ.சிவஞானத்தின் எனது போராட்டம் என்னும் நூல் .............. வகையைச் சார்ந்தது

அ. வரலாற்று நூல் ஆ. தன்வரலாற்று நூல்

இ. ஆய்வு நூல் ஈ. பயணவகை நூல்

33. நம் இந்திய நாட்டு, நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த திரு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் **பெண் ஆற்றல் விருது** பெற்றவர்

அ. எம்.எஸ். சுப்புலட்சுமி ஆ. பால சரஸ்வதி

இ. ராஜம் கிருஷ்ணன் ஈ. சின்னப்பிள்ளை

**34. சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்** - என்று பாடியவர்

அ. கண்ணதாசன் ஆ. பாரதியார்

இ. பாரதிதாசன் ஈ. கவிமணி

35. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி

அ. ஜால்ரா ஆ. பறை இ. உருமி ஈ. நாகசுரம்

36. குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகள்

அ. புலி, கரடி ஆ. முயல், மான்

இ. எருமை, நீர் நாய் ஈ. முதலை, சுறா

37. கிழக்கு என்பதற்கு .................. என்னும் பெயரும் உண்டு

அ. குடக்கு ஆ. குணக்கு இ. வாடை ஈ. தென்றல்

38. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்று சொன்னவர்

அ. பாரதியார் ஆ. மணவை முஸ்தபா

இ. மு.கு. ஜகந்நாத ராஜா ஈ. கவிமணி

39. மலைபடுகடாம் ..................... எனவும் அழைக்கப்படுகிறது

அ. பொருநராற்றுப்படை அ. சிறுபாணாற்றுப்படை

இ. பெரும்பாணாற்றுப்படை ஈ. கூத்தராற்றுப்படை

40. பகை நாட்டுப் பசுக்கூட்டங்களை கவர நினைப்பவர் ................ பூவைச் சூடிச் செல்வர்

அ. வெட்சி ஆ. கரந்தை இ. வஞ்சி ஈ. காஞ்சி

41. கண்ணதாசனின் சேரமான் காதலி என்னும் புதினத்திற்குக் கிடைத்த விருது

அ. அண்ணா விருது ஆ. நோபல் விருது

இ. சாகித்திய அகாதமி விருது ஈ. இந்திய மாமணி விருது

42. கப்பல் ஓடியது என்பது ................ தொடர்

அ. பெயரெச்சத் தொடர் ஆ. வினையெச்சத் தொடர்

இ. எழுவாய்த் தொடர் ஈ. வினைமுற்றுத் தொடர்

43. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ. 305 ஆ. 691 இ. 105 ஈ. 481

44. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் .................

அ. கால்டுவெல் ஆ. வீரமாமுனிவர் இ. ஜி.யு. போப் ஈ. கம்பர்

45. சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் வருவது

அ. வேற்றுமைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ. வினைத்தொகை

46. "வால்காவிலிருந்து கங்கை வரை" என்னும் நூலின் ஆசிரியர்

அ. கணமுத்தையா ஆ. வைரமுத்து

இ. ராகுல் சாங்கிருத்யாயன் ஈ. யூமா வாசுகி

47. பொருத்துக

1) கோட்டை காத்தல் - i) வஞ்சித்திணை

2) வலிமையை நிலைநாட்டல் - ii) நொச்சித்திணை

3) மண்ணாசை - iii) வெட்சித்திணை

4) ஆநிரை கவர்தல் - iv) தும்பைத்திணை

அ. 1 - iii, 2 - ii, 3 - vi, 4 - i ஆ. 1 - ii, 2 - iv, 3 - i, 4 - iii

இ. 1 - iv, 2 - i, 3 - iii, 4 - ii ஈ. 1 - ii, 2 - iii, 3 - i, 4 - iv

48. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய இசைக்காக அளபெடுப்பது

அ. இன்னிசை அளபெடை ஆ. சொல்லிசை அளபெடை

இ. செய்யுளிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை

49. ஆநிரைகளை கவர்ந்து வர வெட்சிப் பூவினை வீரர்கள் சூடிக்கொண்டு செல்வர். வெட்சிப்பூ தற்காலத்தில் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

அ. இட்லிப்பூ ஆ. வாகைப்பூ இ. கனகாம்பரம் ஈ. செம்பருத்தி

50. கீரை, வாழை முதலியவற்றின் அடிப்பகுதி

அ. தூறு ஆ. கோல் இ. தண்டு ஈ. தாள்

51. "இல்லோர் ஒக்கல் தலைவன்" - "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்படுவோர் -

அ. வள்ளல் ஆ. மன்னர் இ. அமைச்சர் ஈ. படைத்தளபதி

52. இன்மை புகுத்தி விடுவது .........

அ. முயற்சி ஆ. திரு இ. முயற்றின்மை ஈ. தாளாண்மை

53. ஆண் குழந்தையை "வாடிச் செல்லம்" என்று கொஞ்சுவது

அ. பால் வழுவமைதி ஆ. திணை வழுவமைதி

இ. கால வழுவமைதி ஈ. இட வழுவமைதி

54. "இது செய்வாயா?" என்று வினவிய போது "நீயே செய்" என்பது

அ. மறை விடை ஆ. நேர் விடை

இ. ஏவல் விடை ஈ. இனமொழி விடை

55. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்

அ. குறுந்தொகை ஆ. கொன்றை வேந்தன் இ. திருக்குறள் ஈ. நற்றிணை

56. "காலம் கரந்த பெயரெச்சம்" என்பது

அ. வினைத்தொகை ஆ. உம்மைத்தொகை

இ. பண்புத்தொகை ஈ. அன்மொழித்தொகை

57. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்

அ. எள் கசடு ஆ. பிண்ணாக்கு இ. ஆமணக்கு ஈ. எள்கட்டி

**58.** கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க - **மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்**

அ. மலை மீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது

ஆ. கருத்த மேகம் மலை மீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின

இ. திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன

ஈ. மலைமீது மழை பொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது

59. கருணையன் என்பவர்

அ. வீரமாமுனிவர் ஆ. யோசேப்பு இ. அருளப்பன் ஈ. சாந்தாசாகிப்

60. <u>சோலையில்</u> பூத்த மணமலர்களில் <u>சுரும்புகள்</u> மொய்த்துப் பண்பாடி <u>மது</u>வுண்டன . இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.

அ.பூஞ்சோலை - அரும்புகள் ஆ. மலை - எறும்புகள் - தேன்

இ. பூஞ்சோலையில் - வண்டுகள் - தேன் ஈ. கானகம் - வண்டுகள் - நீர்

61. எழுகதிர், முத்துப்பல் - இச்சொற்களில் மறைந்துள்ள தொகைகள் முறையே

அ. வினைத்தொகை, பண்புத்தொகை

ஆ. உவமைத்தொகை, வினைத்தொகை

இ. உவமைத்தொகை, வினைத்தொகை

ஈ. வினைத்தொகை, உவமைத்தொகை

62. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்

அ. தமிழகனார் ஆ. அப்பாத்துரையார்

இ. தேவநேயப் பாவாணர் ஈ. இரா. இளங்குமரனார்

63. . கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர் -

இத்தொடர்களின் சரியான கலவைத் தொடர்

அ. கூத்துக்கலைஞர் பாடவில்லை என்றால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்

ஆ. கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்

இ. கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கினார் என்பதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்

ஈ. கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கி கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்தி வைத்தார்

64. ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக

அ. ஆலமரம், வேப்பமரம் - டு, க    ஆ. ஆலமரம், வேலமரம் - ச, உ

இ. அரசமரம், வேங்கை மரம் - க, உ    ஈ. வேப்பமரம், ஆலமரம் - ச, கூ

65. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க

தவழும்போது ஒரு பெயர்,
விழும்போது ஒரு பெயர்
உருளும்போது ஒரு பெயர்,
திரண்டோடும்போது ஒரு பெயர் - அவை என்ன?

அ. நீர், மழை, ஆறு, ஓடை    ஆ. மேகம், மழை, நீர், வெள்ளம்

இ. மாரி, கார். நீர். புனல்    ஈ. மழை, புனல், மேகம், நீர்

66. தென்னை மரங்கள் நிறைந்த பகுதியைக் குறிப்பிடும் வழா நிலை -

அ. தென்னந்தோட்டம்    ஆ. தென்னஞ்சோலை

இ. தென்னந்தோப்பு    ஈ. தென்னங்காடு

67. கானடை - என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.

அ. கான் அடை - காட்டைச் சேர்    ஆ. கால் உடை - காலால் உடைத்தல்

இ. கான் நடை - காட்டுக்கு நடத்தல்    ஈ. கால் நடை - காலால் நடத்தல்

68. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்க.

தலைப்பு - செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள்
1. கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.
2. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது

அ. குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது

ஆ. தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன

இ. தலைப்புக் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ. குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

69. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க.

அ. திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று 'அறுதியிட்டுக்' கூறுகிறார்

ஆ. திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்

இ. திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்

ஈ. 'திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்

70. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக

பச்சரியைக் கொண்டு .............. செய்து பாசிப்பருப்பினை வறுத்து .......... பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு ........... செய்து முடித்த அம்மா, இறுதியில் உருளைக்கிழங்கைச் சீவி ............... செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.

அ. பொங்கல், உருண்டை, சீவல், அல்வா

ஆ. சீவல், உருண்டை, அல்வா, சீவல்

இ. பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்

ஈ. உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

71. பாரதியார் காற்றை மயலுறுத்து அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர்

அ. மணம் வீசும் காற்றாய் நீ வா

ஆ. மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ. மயிலாடும் காற்றாய் நீ வா

ஈ. மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

72. இலையுதிர்காலம் .............. சருகாயின!
மழைக்காலம் ............ தழைத்தன!
சருகுகளோ செழுமையான உரங்களாயின! - புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.

அ. மரங்களெல்லாம், கிளை பரப்பின ஆ. காடெல்லாம், வளர்ந்தன
இ. இலைகளெல்லாம், மரங்களெல்லாம் ஈ. மலையெல்லாம், முளைத்தன

73. முதற்பொருளுக்கேற்ற கருப்பொருளைப் பொருளைப் பொருத்துக.
அ. குறிஞ்சி - 1. உப்பு விளைவித்தல்
ஆ. முல்லை - 2. நெல்லரிதல்
இ. மருதம் - 3. நிரைமேய்த்தல்
ஈ. நெய்தல் - 4. தேனெடுத்தல்
அ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1 ஆ) அ - 3, ஆ - 3, இ - 4, ஈ - 1
அ) அ - 1, ஆ - 3, இ - 2, ஈ - 4 அ) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 3

74. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.
அ. குறிஞ்சி, முல்லை, செய்தல், மருதம், பாலை - நல்வினை, தீவினை
ஆ. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை
இ. குறிஞ்சி, முல்லை, நெய்தல, பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்
ஈ. குறிஞ்சி, முல்லை, மலை, காடு, வயல் - பனை, திணை

75. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" - பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து
அ. பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்
ஆ. பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்ற வேண்டும்
இ. உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்
ஈ. கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

76. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" - இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள்
அ. காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்
ஆ. உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்
இ. உரிய காலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல்பட வேண்டும்
ஈ. உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.

77. வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்
அ. ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
ஆ. இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ. சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
ஈ. ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

78. முல்லை நில மக்களின் உணவுப் பொருள்கள்
அ. வெண்நெல், வரகு ஆ. மலைநெல், தினை
இ. வரகு, சாமை ஈ. மீன், செந்நெல்

79. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்
அ. திரு. பிரகாசம் ஆ. மார்ஷல் ஏ. நேசமணி
இ. தனிநாயகம் அடிகள் ஈ. ந. முத்துசாமி

80. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை - ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -
அ. வேற்றுமை உருபு ஆ. எழுவாய்
இ. உவம உருபு ஈ. உரிச்சொல்

81. "காலின் ஏழடிப் பின் சென்று" - என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி
அ. விருந்தினரின் காலைத்தொட்டு வணங்கினர்
ஆ. விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்
இ. எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்
ஈ. ஏழு நாள்கள் விருந்தளித்துப பின் விருந்தினரை வழியனுப்புவர்

82. வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் ............... வருந்திக் கொண்டிருந்தாள் - விடுபட்ட இடத்தில் பொருத்தமான உவமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.
அ. தாமரை இலை நீர்போல் ஆ. வாழையடி வாழையாக
இ. கண்ணினைக் காக்கும் இமை போல ஈ. மழைமுகம் காணாப் பயிர்போல

83. மரபுத் தொடருக்கான பொருளைத் தேர்க - ஆறப்போடுதல்
அ. தாமதப்படுத்துதல் ஆ. ஆற்றில் போடுதல்
இ. ஆறவைத்தல் ஈ. ஆற்றில் இறங்குதல்

84. தமிழ்த்தொண்டு என்னும் தொடர்
அ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ. அன்மொழித்தொகை
இ. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ. வேற்றுமைத்தொகை

85. திணை வழுவமைதி -
அ. "இந்தப் பாப்பா தூங்கமாட்டாள்" என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது
ஆ. இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது
இ. "வாடாச் செல்லம்" என்று தாய் மகளை அழைப்பது

ஈ. "என் தங்கை வந்தாள்" என்று பசுவைக் குறிப்பிடுவது

86. பழமொழிகளைப் பொருத்துக.

அ. ஆறில்லா ஊருக்கு - 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்
ஆ. உப்பில்லாப் பண்டம் - 2. நூறு வயது
இ. நொறுங்கத் தின்றால் - 3. குப்பையிலே
ஈ. ஒரு பானை - 4. அழகு பாழ்

அ) அ - 4, ஆ - 1, இ - 3, ஈ - 2 ஆ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1
இ) அ - 2, ஆ - 4, இ - 1, ஈ - 3 ஈ) அ - 3, ஆ - 1, இ - 4, ஈ - 2

87. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், தூறைக்காற்றின் ஆலோலம் -

அ. மொட்டின் வருகை ஆ. வனத்தின் நடனம்
இ. உயிர்ப்பின் ஏக்கம் ஈ. நீரின் சிலிர்ப்பு

88. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைத் தேர்க

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்

அ. தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ. தங்கக் கட்டிகளை ஈக்வலாக
இ. தங்கக் கட்டிகளை ஈடாக ஈ. தங்கக் கட்டிகளை முறையாக

89. ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா? - என்று நூலகரிடம் வினவுதல்

அ. அறிவினா ஆ. கொளல்வினா இ. அறியாவினா ஈ. ஏவல் வினா

90. ஓரெழுத்தில் சோலை இரண்டெழுத்தில் வனம் - என்ற புதிருக்கான விடை

அ. காடு ஆ. நாடு இ. வீடு ஈ. தோடு

91. தூசும் துகிரும் ஆரமும் அகிலும் - இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல்

அ. மணிமேகலை ஆ. தேம்பாவணி
இ. கம்பராமாயணம் ஈ. சிலப்பதிகாரம்

92. மலர்விழி பாடினாள் - இத்தொடர்

அ. தனிமொழி ஆ. அடுக்குத்தொடர்
இ. பொதுமொழி ஈ. தொடர்மொழி

93. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக்காற்று வீசியது - என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு

அ. வனத்தின் நடனம் ஆ. மிதக்கும் வாசம்
இ. மொட்டின் வருகை ஈ. காற்றின் பாடல்

94. மெய்கீர்த்தி என்பது

அ. புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
ஆ. மன்னர்களின் புகழை ஓலைச்சுவடிகளில் எழுதி வைப்பது
இ. ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கியம்
ஈ. அறக்கருத்துகள் அடங்கிய நூல்

95. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் - இத்தொடரில் உள்ள வேற்றுமை உருபுகள்

அ. ஐ, ஆல் ஆ. ஆல், கு இ. ஐ, கு ஈ. இன், கு

96. சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள மருவூர்ப்பாக்கம் அமைந்துள்ள நகரம்

அ. மதுரை ஆ. புகார் இ. வஞ்சி ஈ. முசிறி

97. சந்தக்கவிமணி என அழைக்கப்படுபவர்

அ. செய்குதம்பிப் பாவலர் ஆ. ம.பொ.சி
இ. தமிழழகனார் ஈ. பெருஞ்சித்திரனார்

98. உப்பில்லாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும் என்று கூறுவது

அ. காசிக்காண்டம் ஆ. விவேகசிந்தாமணி
இ. சிலப்பதிகாரம் ஈ. மலைபடுகடாம்

99. ஓங்கு - என்ற அடைமொழியைக் கொண்ட சங்க இலக்கிய நூல்

அ. குறுந்தொகை ஆ. பரிபாடல் இ. கலித்தொகை ஈ. நற்றிணை

100. நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் - என்றவர்

அ. ம.பொ.சி. ஆ. ந. முத்துசாமி
இ. சா. கந்தசாமி ஈ. ஜெயகாந்தன்

தொகுப்பு :
க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, ஆதமங்கலம் - 610 207,
நாகை மாவட்டம் 8667552457, 7598868760